புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 80 | 25-09-2026 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 02 | Issue: 80 | 25-09-2026 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


## "எவ்வளவு அதிகாரம் கிடைத்தாலும் சேவை பாதையில் இருந்து பாஜக ஒருபோதும் விலகாது" : பிரதமர் மோடி



புதுடெல்லி: செப்.25–

சேவையே பாஜகவின் வழிகாட்டும் கொள்கையாக இருந்து வருகிறது என தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, சேவைப் பாதையில் இருந்து கட்சி ஒருபோதும் விலகாது என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் 76 வது பிறந்த தினம் மற்றும் அவரது 25 ஆண்டுகால பொதுவாழ்க்கையை கொண்டாடும் வகையில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்று சேர்ந்து குஜராத்தின் வத்நகரில் இருந்து உத்தரப் பிரதேசத்தின் வாரணாசி வரை சேவைக்கான உறுதிமொழி யாத்திரை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது மத்தியப் பிரதேசத்தின் தேவாஸ் மாவட்டத்தில் உள்ள அவர்களுடன் பாஜக மூத்த தலைவரும் பிரதமருமான நரேந்திர மோடி காணொளி வாயிலாக உரையாடினார்.

அப்போது அவர், "குஜராத் முதல் டெல்லி வரை சேவையே பாஜகவின் நிர்வாகம் மற்றும் விழுமியங்களின் மையமாக இருந்து வருகிறது. சேவை, நிர்வாகத்தின் மையமாக இருக்கும்போது, மக்களே தெய்வம் என்ற உறுதிமொழி ஒவ்வொரு கொள்கையின் மையமாகவும் அமைகிறது.

அரசியலில் எவ்வளவு அதிகாரம் பெற்றாலும், பாஜகவின் அடிப்படைப் பாதை சேவையாகவே இருக்கும் என்பதை நமது செயல்பாடுகள் காட்ட வேண்டும். எவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்தாலும் நாம் அதில் இருந்து ஒருபோதும் விலக மாட்டோம்.

சேவை மனப்பான்மையுடன் செய்யப்படும் பணிகளை மக்கள் நினைவில் கொள்கிறார்கள். சேவை செய்பவர்களை மக்கள் ஆசீர்வதிக்கிறார்கள். எனது முழு வாழ்க்கையும் மக்களின் ஆசீர்வாதத்தால் நிலைத்திருக்கிறது. அவர்களின் ஆசீர்வாதங்களே எனது மிகப்பெரிய ஆற்றல் மூலமாக இருந்து வருகிறது. சேவைக்கான உறுதிமொழிப் பயணத்தை மேற்கொள்ளும் நீங்கள் சேவையை உங்கள் முதன்மை நோக்கமாகக் கொள்ள வேண்டும். சேவை குறித்த செய்தியை நீங்கள் வெறும் உபதேசம் மூலமாக அல்லாமல், செயல்கள் மூலமே பரப்ப வேண்டும்.

மக்களுக்குச் சேவை செய்யுங்கள். உங்கள் நடத்தையே சேவைக்கான செய்தியை வெளிப்படுத்தட்டும். சேவையே உயர்ந்த அறம் என்ற உணர்வுடன் நாம் முன்னோக்கிச் செல்வோம்" என தெரிவித்தார்.

இந்த உரையாடலின்போது, பிரதமர் மோடியால் ஈர்க்கப்பட்டு மத்தியப் பிரதேசத்தின் ஜபுவா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்துக்கு மோடி ஃபாலியா என பெயரிடப்பட்டுள்ளதாக பங்கேற்பாளர் ஒருவர் பிரதமர் மோடியிடம் தெரிவித்தார். ஜென் ஸி தலைமுறையினர் அனைவரும் மோடிக்கு ஆதரவாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தொழுப்பேடு பகுதியில் முதல்வர் விஜய் இன்று பிரச்சாரம்



மதுராந்தகம்: செப்.25–

மதுராந்தகம் சட்டப் பேரவை இடைத்தேர்தலில் தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரவாக, தமிழக முதல்வர் விஜய் இன்று (செப்.25 தொழுப்பேடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட பிரச்சார மேடையில் பங்கேற்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட உள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியின் இடைத்தேர்தல் தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து, பல்வேறு அமைச்சர்கள் தொகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தமிழக முதல்வர் விஜய் நாளை தவெக வேட்பாளருக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பதற்காக தொழுப்பேடு பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட உள்ளார். இதற்காக, அப்பகுதியில் சுமார் 45 ஏக்கர் பரப்பளவில் பிரச்சாரக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில், 30 ஏக்கர் இடம் வாகன நிறுத்தத்துக்கும், மீதமுள்ள இடம் தொகுதிக் குட்பட்ட மக்கள் நாற்காளியில் அமர்ந்து பிரச்சாரத்தை பார்ப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், முதல்வர் இன்று மாலை 4 மணியிலிருந்து 7 மணி வரையில் பொதுக்கூட்ட பிரச்சார மேடையில் பேச உள்ளதால், அப்பகுதியில் பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், திருச்சி சென்னை செல்லும் தேசிய நெடுஞ் சாலையில் வாகன போக்கு வரத்து பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, போலீஸார் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் மு. வீரப்பன் தெரிவித்துள்ளார்.

## "தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அறிவிக்கப்படாத மின்வெட்டு"

### அன்புமணி கடும் விமர்சனம்



சென்னை: செப்.25–

"தமிழ்நாடு மின்சார வாரியத்தில் முதல்வர் விஜய் நேரடியாக சென்று ஆய்வு செய்த பிறகும் மின்வெட்டு தொடர்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அலட்சியம் காட்டாமல், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு மின்வெட்டைப் போக்க வேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் இன்று காலை நடைபெற்ற செங்கோட்டையன், அருண்ராஜ் உள்ளிட்ட 5 அமைச்சர்கள் பங்கேற்ற தேர்தல் பரப்புரைக் கலந்தாய்வுக் கூட்டத்தின்போது மின்தடை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டும், அடிக்கடி ஏற்படும் மின்தடைகளும் அதிகரித்து வருவது கண்டிக்கத்தக்கது.

தலைநகரம் சென்னை தொடங்கி தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அறிவிக்கப்படாத மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதனால் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்படாத மின்வெட்டு, மின் அழுத்தம் சீராக இல்லாதது உள்ளிட்ட காரணங்களால் மட்டும் கோவை பகுதியில் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்கள் சேதமடைந்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தமிழ்நாடு முழுவதும் 100 கோடி ரூபாய்க்கும் கூடுதலான கருவிகள் சேதமடைந்துள்ளன.

வழக்கத்தை விட மின்சாரத்தின் தேவை அதிகமாக இருப்பது தான் மின்வெட்டுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. இதை சமாளிக்க 2000 மெகாவாட் மின்சாரம் வெளிச்சந்தையிலிருந்து வாங்கப்படுவதாகவும், அதனால் மின்வெட்டு சீராகி விட்டதாகவும் தமிழக அரசுத் தரப்பில் கூறப்பட்டு வருகிறது.

ஆனால், கள நிலைமையில் எந்த மாற்றமும் இல்லை. கிராமப்புறங்களில் ஒரு நாளைக்கு 6 முதல் 8 மணி நேரம் வரை மின்சாரம் நிறுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. காவிரி பாசன மாவட்டங்களில் சம்பா சாகுபடியும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

மின்வெட்டை சரி செய்வது சாத்தியமில்லாத செயல் அல்ல. தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையை விட உற்பத்தியும், கொள்முதலும் சேர்ந்து 2000 மெகாவாட் குறைவாக இருப்பது தான் மின்வெட்டுக்கு காரணம் ஆகும். தேசிய சந்தையில் மின்சாரம் இப்போது எளிதாகக் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் தனியார் மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து கூட மின்சாரம் வாங்க முடியும். ஆனால், அதற்கான நடவடிக்கைகள் அரசுத் தரப்பில் முழுமையாக மேற்கொள்ளப்படாதது மின்வெட்டு மற்றும் மின்தடைக்கு காரணம் ஆகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் முதல்வர் விஜய் நேரடியாக சென்று ஆய்வு செய்த பிறகும் மின்வெட்டு தொடர்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழக அரசும், மின்சார வாரியமும் இனியும் அலட்சியம் காட்டாமல், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு மின்வெட்டைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று அன்புமணி கூறியுள்ளார்.

## கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அனைத்து முடிவுகளும் ஒருமனதாகவே எடுக்கப்பட்டன: தலைமை தேர்தல் ஆணையம் விளக்கம்




புதுடெல்லி: செப்.25–

நாடு முழுவதும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ் ஐ ஆர்) தொடர்பாக தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு இடையே கருத்து வேறு பாடுகளும் மோதல்களும் நிலவுவதாக தனியார் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

அதில், தேர்தல் ஆணையாளர்களான சுக்பீர் சிங் சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகிய இருவரும், தங்களின் கவனத்துக்கு வராமலேயே பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படுவதாகக் கூறி, கடந்த 10 மாதங்களில் 14 முறை தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ள நிலையில் தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: எந்தவொரு நிறுவனத்திலும் கலந்தாலோசனையின்போது மாறுபட்ட கருத்துகள் இருப்பது இயல்பான ஒன்றுதான். இறுதி முடிவு எடுக்கப்படுவதற்கு முன்னர், முடிவெடுக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக அவை அமைகின்றன.

எனினும், ஒருமித்த அடிப்படையில் அல்லது பெரும்பான்மை ஆதரவின் அடிப்படையில்தான் இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. மூன்று ஆணையர்கள் மட்டுமல்ல, ஆணையத்தின் ஒவ்வொரு அதிகாரிக்கும் தேர்தல் முறையை மேம்படுத்துவதற்காகத் தங்களது ஆலோசனைகளை ஆணையத்துக்கு வழங்க முழு அதிகாரம் உள்ளது.

கடந்த 10 மாதங்களில் நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை நடத்துவது உள்ளிட்ட பல தேர்தல் சீர்திருத்தங்களை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. இவை அனைத்தும் கடந்த ஓராண்டில் முழு ஆணையத்தின் ஒருமனதான முடிவுகளாகும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் அடையாளம் பாஜக எம்.பி. சம்பிட் பத்ரா டெல்லியில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: நாட்டில் தேர்தல்களை நடத்தும் மூன்று தேர்தல் ஆணையர்களும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளாமலும், கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளாமலும், கலந்தாலோசிக்காமலும், வெறுமனே தங்களுக்குள் உடன்பட்டுக் கொண்டே இருந்தால் அதை சர்வாதிகாரம் என எதிர்க்கட்சிகள் சொல்லும். ஆனால் 3 தேர்தல் ஆணையர்களுக்கும் இடையே 14 முறை கடிதப் பரிமாற்றம் நடந்துள்ளது.

இது 3 ஆணையர்களுக்கும் இடையேயான அதிகாரப்பூர்வ கலந்தாலோசனையாகும். இது போன்ற கலந்தாலோசனைகள் உண்மையில் ஒரு ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அறிகுறியாகும். 2014ல் மோடி அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து, எதிர்க்கட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ந்து வருகின்றன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாததால் அவற்றின் இருப்புக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டு, ஜனநாயக அரங்கில் வீழ்ந்தன. அவதூறு பிரச்சாரத்தின் ஒரு பகுதி தேர்தல்களில் வெற்றி பெற இயலாத நிலையில், காங்கிரஸ் நமது அரசியல் சாசன அமைப்புகளை தாக்கத் தொடங்கி, அவற்றை அவதூறு செய்ய முயல்கிறது. தேர்தல் ஆணையம் மீதான விமர்சனமும் அந்த பிரச்சாரத்தின் ஒரு பகுதிதான். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஜெம் வீரமணி வழக்கு: சாந்தி, மகேந்திர சிம்ஹனை 3 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க உத்தரவு



சென்னை: செப்.25–

ஜெம் வீரமணி மீதான போக்சோ வழக்கில் கைதாகியுள்ள சாந்தி மற்றும் அவரது கணவர் மகேந்திர சிம்ஹனை 3 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி அளித்து சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறுமிகளிடம் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஜெம் கிரானைட் தொழிலதிபர் வீரமணி மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த அவரது உதவியாளர் சாந்தி மற்றும் அவரது கணவர் மகேந்திர சிம்ஹன், வீரமணி உதவியாளர் கணேசன் ஆகியோர் மீது மத்திய குற்றப் பிரிவு காவல் துறை வழக்குப் பதிவு செய்து கைது செய்துள்ளது.

இந்த வழக்கில் சாந்தி மற்றும் மகேந்திர சிம்ஹன் இருவருரையும் மூன்று நாள் தங்கள் காவலில் எடுத்து விசாரிக்க கோரி சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல் துறை தரப்பில் சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், 'ஏற்கெனவே இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு காவல் எடுத்து விசாரித்த வீரமணி அளித்த தகவலின் பெயரில் இவர்கள் இருவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இன்னும் எத்தனை சிறுமிகள் இதில் பாதிக்கப்பட்டுள்ளனர், எவ்வளவு நாட்களாக குற்றம் நடந்தது, வேறு யார் யாருக்கு எல்லாம் தொடர்பு என்பது குறித்து முழுமையாக விசாரிக்க வேண்டும்.

எனவே, இருவரையும் மூன்று நாட்கள் தங்களின் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி வழங்க வேண்டும்' என காவல் துறை தரப்பில் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கபட்டது.

இந்த மனு நீதிபதி பத்மா முன்பு நேற்று மாலை விசாரணைக்கு வந்தபோது, சாந்தி மற்றும் அவரது கணவர் மகேந்திர சிம்ஹன் ஆகியோருக்கு 3 நாட்கள் போலீஸ் காவல் வழங்கி உத்தரவிட்டார். மேலும், இருவரையும் வரும் ஞாயிற்றுகிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நீதிபதி உத்தரவிட்டார்.

பின்புலம் என்ன?

பணம், செல்போன், பரிசுப் பொருட்கள் என விலை உயர்ந்த பொருட்களைக் கொடுத்து சிறுமிகளைப் பாலியல் வன்கொடுமை செய்ததாக, 'ஜெம் கிரானைட்ஸ்' நிறுவனர் ஆர்.வீரமணி (84) கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கடந்த 2019ம் ஆண்டு எடுக்கப்பட்ட வீடியோ மூலம் இந்த தகவல் வெளியானது.

குறிப்பாக, இவர் ஏழ்மை மற்றும் ஆதரவற்ற சிறுமிகளைக் குறி வைத்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார். இவரால் 100க்கும் மேற்பட்டோர் பாதிக்கப் பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த வழக்கில் நாள்தோறும் ஒவ்வொரு தகவல்களாக வந்தவண்ணம் உள்ளன.

சென்னை தேனாம்பேட்டையில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அந்த வீட்டில் சிறுமிகள் மற்றும் பெண்களை வரவழைத்து அவர்களுடன் ஜெம் வீரமணி பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளார். இந்த வழக்கில் வீரமணியின் தேனாம்பேட்டை வீட்டை கவனித்து வந்த அவரது உதவியாளர்கள் சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்ஹன் ஆகியோர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில்தான் அவர்களை 3 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மாணவர் விடுதிகளில் மாட்டுக்கறி வழங்க பரிசீலிக்கப்படும் என கூறியதற்கு அமைச்சர் வன்னியரசு மன்னிப்பு கேட்க வேண்டும்

## புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி வலியுறுத்தல்

கோவை செப்:25

கோவை குனியமுத்தூரில் உள்ள பொதிகை இல்லத்தில் புதிய தமிழகம் கட்சியின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் க.கிருஷ்ணசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர்,அரசு மாணவர் விடுதிகளில் மாட்டுக்கறி வழங்குவது குறித்து அமைச்சர் வன்னியரசு தெரிவித்த கருத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். தமிழ்நாட்டில் அரசு நடத்தும் பள்ளி,கல்லூரி மற்றும் மாணவர் விடுதிகளில் இதுவரை முட்டை,கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி உள்ளிட்டவை வழங்கப்பட்டு வரும் நிலையில், மாட்டுக்கறி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்திருப்பது பலரது உணர்வுகளை புண்படுத்தும் வகையில் இருப்பதாக அவர் கூறினார்.



அமைச்சர் ஒருவர் தெரிவிக்கும் கருத்து அரசின் கருத்தாக பார்க்கப்படும் என்பதால்,வன்னியரசு தனது கருத்தை திரும்பப் பெற்று பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என வலியுறுத்தினார்.மேலும்மாணவர் விடுதிகளில் உணவு தரம் குறித்த புகார்கள் இருக்கும் நிலையில்,மாட்டுக்கறி வழங்குவது தொடர்பான முடிவு குறித்து அரசு கவனமாக பரிசீலிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.இந்த விவகாரத்தை கண்டித்து,வரும் செப்டம்பர் 30ஆம் தேதி அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பாக புதிய தமிழகம் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவித்தார்.

மேலும், அமைச்சர் வன்னியரசுவின் இல்லம் முன்பாகவும் போராட்டம் நடத்தப்படும் என்றும், அவர் தனது கருத்தை திரும்பப் பெறும் வரை போராட்டங்கள் தொடரும் என்றும் க.கிருஷ்ணசாமி தெரிவித்தார். அமைச்சர் வன்னிய அரசின் கருத்து விஜயின் அரசுக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் வன்னியரசு போன்றவர்களை முன்கூட்டியே அடக்கி வைக்க வேண்டும் எனவும் கடுமையாக விமர்சித்தார்.

அடுத்தடுத்து நடைபெறவுள்ள தேர்தல்களில் கூட்டணி அமைப்பது அல்லது தனித்துப் போட்டியிடுவது குறித்து அந்தந்த நேரத்தில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.உணவு என்பது தனிநபரின் விருப்பம் என்றும்,அதில் யாரும் தலையிட முடியாது என அமைச்சர் வன்னியரசு கூறியிருப்பது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கும் க.கிருஷ்ணசாமி பதிலளித்தார்.

மக்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் உண்மையாகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும் என்பதே தனது கருத்து என்றும் அவர் தெரிவித்தார்.

# வேலூர் விஜயபானுவின் சேலம் லீலை 17 வருஷ தண்டனை வாங்கியும் அடங்கல போலீசுக்கு 48 லட்சம் வைரல் ஆடியோ.

வேலூரை சேர்ந்த சேலம் விஜயபானு நினைவிருக்கிறதா? அவர்தான் இன்றைய ஹாட் டாபிக்.. அன்னை தெரசா அறக்கட்டளை ரூ.300 கோடி மோசடி செய்ததாக இவர்மீது ஏற்கனவே வழக்கு உள்ளது.

கைதாகி ஜெயிலிலும் அடைக்கப் பட்டுள்ளார்.. ஆனால் போலீசுக்கு ரூ.48 லட்சம் லஞ்சம் கொடுத்ததாக, கைதான விஜயபானு பேசும் ஆடியோ தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் விஜயபானு யார் தெரியுமா? அம்மாப்பேட்டையில் தனியார் திருமண மண்டபத்தில் புனித அன்னை தெரசா மனித நேய அறக்கட்டளையை நடத்தி வந்தவர்.. அறக்கட்டளையில் முதலீடு செய்தால் அதிக வட்டி, டபுள் லாபம் என்று ஆசை வார்த்தை கூறி பலரிடம் பணம் பெற்று, ரூ.500 கோடி வரை மோசடி செய்தாக இவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

சேலம் விஜயபானு யார் தெரியுமா?

500 கோடியா? என்று அதிர்ந்த பொருளாதார குற்றப்பிரிவு போலீசார், உடனடியாக விசாரணையை தீவிரப்படுத்தி, விஜயபானு உள்ளிட்டோரின் வங்கி கணக்குகளில் இருந்த ரூ.2 கோடியை முடக்கினர். அறக்கட்டளையில் சோதனை நடத்தி ரூ.12.65 கோடி பணம், 2.5 கிலோ தங்கம், 13 கிலோ வெள்ளியையும் பறிமுதல் செய்து, விஜயபானு உள்ளிட்ட 4 பேரை கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

ஆனால் விஜயபானுவுக்கு எதிரான மோசடி புகார்கள் இப்போதுதான் தொடங்கியவை இல்லை. கடந்த 2011ல் ஒரு வழக்கில் புழல் பெண்கள் ஜெயிலில் அடைக்கப் பட்டவர்.. அங்கு சிறைக்கைதியாக இருந்துக்கொண்டே, டெல்லியில் ஐபிஎஸ் அதிகாரியாக பணியாற்றி கொண்டிருக்கிறேன், சிறையில் நடக்கும் ஊழலை ரகசியமாக தெரிந்துகொள்ளவே இப்படி ஜெயிலுக்கு வந்திருக்கிறேன் என்று கதை கதையாக அளந்து விட்டவர்.

சேலம் அறக்கட்டளை மோசடி

இந்த கதையையும் ஜெயில் வார்டன் விஜயா என்பவர் நம்பியிருக்கிறார். உடனே விஜயாவிடமும் 22 சவரன் நகை மற்றும் ரூ.5 லட்சம் பணத்தை ஆட்டைய போட்டு விட்டார்.. இதுதொடர்பான வழக்கும் 13 ஆண்டுகளாக நடந்தது.. கடைசியில், பூவிருந்தவல்லி கோர்ட் விஜயபானுவுக்கு 8 பிரிவுகளின் கீழ் மொத்தம் 17 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.1 லட்சம் அபராதமும் சில மாதங்களுக்கு முன்பு விதித்தது.



ஆனாலும், சென்னை, காஞ்சிபுரம், ஆந்திரா, வேலூர், சேலம் உள்ளிட்ட இடங்களில் விஜயபானு மீது மேலும் பல வழக்குகள் நிலுவையில் இருப்பதால், அடுத்தடுத்து என்னென்ன திருப்பங்கள் வரப்போகிறது என்பதே கவனத்தை ஏற்படுத்தி வந்தது..

300 கோடி அறக்கட்டளை மோசடி

இதில் சேலத்தையே அதிர வைத்தது 300 கோடி அறக்கட்டளை மோசடி விவகாரம்தான்.. பணத்தை இழந்தவர்கள் இன்னும் விடவில்லை. தங்களுக்கு பணம் கிடைக்காததால், பாஸ்டர் செந்தில்குமார் நடத்தி வந்த ஜெபக்கூடத்திலேயே தற்போது போராட்டத்தை ஆரம்பித்து விட்டனர்.. 4வது நாளாக உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

"நாங்கள் செலுத்திய பணத்தை வாங்கிக் கொடுங்கள்.. பணம் கிடைக்காமல் இங்கிருந்து போக மாட்டோம்" என்று அவர்கள் தொடர்ந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கிறார்கள்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன், நேரடியாகவே அங்கு சென்று போராட்டக்காரர்களிடம் பேசியுள்ளார்... போலீசில் புகார் தந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சமாதானம் செய்தார்.. ஆனாலும், "புகார் கொடுத்தால் எங்களுக்கு பணம் வராது.. நீங்களே பணத்தை வாங்கிக் கொடுங்கள்" என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

விஜயபானு ஆடியோ வைரல்

இந்த பரபரப்புக்கு நடுவே, விஜயபானு பேசியதாக கூறப்படும் ஆடியோ ஒன்று திடீரென இன்று சோஷியல் மீடியாவில் பரவி வருகிறது.

அதில் விஜயபானு, மாநகர போலீஸ்காரர் ஒருவர் 48 லட்சம் ரூபாயை அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டும் என கூறி தங்களிடம் வாங்கி சென்றார் என தெரிவிக்கிறார். இந்த ஆடியோ போலீஸ் அதிகாரிகள் மத்தியில் கொந்தளிப்பையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. ஆடியோவில் பேசுவது உண்மையிலேயே விஜயபானு தானா? யாரிடம் பணத்தை கொடுத்தார்? என்பது குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

# ஈரோட்டில் டெங்கு விழிப்புணர்வு கூட்டம்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், பள்ளி மாணவ மாணவிகளுக்கு டெங்கு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தலைமை வகித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு அறிவுரைகளை வழங்கினார். கூட்டத்தில் சுகாதாரத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தேசிய அளவிலான கயிறு தாண்டுதல் போட்டியில் சங்கராபுரம் மாணவிகள் சாதனை




சங்கராபுரம், செப். 25

மகாராஷ்டிரா மாநிலம் சீரடியில் நடைபெற்ற சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு இடையிலான தேசிய அளவிலான கயிறு தாண்டுதல் (ரோப் ஸ்கிப்பிங்) போட்டியில் சங்கராபுரத்தைச் சேர்ந்த மாணவிகள் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

நாடு முழுவதும் இருந்து 70க்கும் மேற்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த 450 க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்ற இப்போட்டியில், தமிழ்நாடு ஜம்ப்ரோப் அசோசியேஷன் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஜம்ப்ரோப் அசோசியேஷனைச் சேர்ந்த மாணவிகள் தேவசேனா, பூமிகா, தக்ஷனா, தன்யாஸ்ரீ ஆகியோர் 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் வேகம் மற்றும் டபுள் அண்டர் ரிலே போட்டியில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் வென்று இரண்டாம் இடம் பிடித்தனர்.

தேசிய அளவிலான போட்டியில் சிறப்பாக விளையாடி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த மாணவிகளை தமிழ்நாடு கயிறு தாண்டுதல் சங்கத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமலை தமிழரசன், சங்கச் செயலாளர் சுகுமாறன்,கள்ளக்குறிச்சி மாவட்ட கயிறு தாண்டுதல் சங்கச் செயலாளர் குசேலன், பயிற்சியாளர் சூரியமூர்த்தி, மாணவிகளின் பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

தேசிய அளவில் சிறப்பிடம் பெற்று கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கும் சங்கராபுரம் நகருக்கு பெருமை சேர்த்த மாணவிகளுக்கு பல்வேறு தரப்பினரும் தங்களது பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

# காலாண்டு தேர்வு விடுமுறையில் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகளுக்கு தடை: பள்ளிக்கல்வித் துறை உத்தரவு

சென்னை: செப்.25–

காலாண்டு தேர்வு விடுமுறையில் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகளுக்கு தடை என்று பள்ளிக்கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது. பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்யுங்கள்

தமிழக பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் அரசு, தனியார் பள்ளி மாணவர்களுக்கான காலாண்டு தேர்வுகள் கடந்த 17ந்தேதி முதல் தொடங்கியது. இந்த தேர்வுகள் நாளை வரை நடைபெறுகின்றன. இதனைத் தொடர்ந்து, வரும் 26ந்தேதி முதல் அக்டோபர் 4ந்தேதி வரை மாணவர்களுக்கு காலாண்டு தேர்வு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. தேர்வு எழுதிய மாணவர்கள் மன அழுத்தத்தில் இருந்து விடுபடவும், ஓய்வு எடுக்கவும் இந்த உத்தரவு பின்பற்றப்படுகிறது.

மேலும், பள்ளிகள் மீண்டும் அக்டோபர் 5 ந்தேதி இரண்டாம் பருவத்திற்காக திறக்கப்பட உள்ளன.இந்நிலையில், காலாண்டு தேர்வு விடுமுறை நாட்களில் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்த பள்ளிக்கல்வித்துறை தடை விதித்துள்ளது.சிறப்பு வகுப்புகள் மட்டுமின்றி காலாண்டு தேர்வில் பள்ளிகளில் இருந்து மாணவர்களை சுற்றுலா அழைத்துச் செல்லவும் தடை விதித்துள்ளது.உத்தரவை மீறி வகுப்புகளோ அல்லது சுற்றுலாவோ நடத்தப்பட்டு, ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் தலைமை ஆசிரியர்களே பொறுப்பு என்று பள்ளிக்கல்வித்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

# வந்தவாசி தமிழ்ச்சங்கம் சார்பில் சுழலும் சொல்லரங்கம்..!




வந்தவாசி, செப் 25

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்ட தமிழ்ச் சங்கம் சார்பில் சுழலும் சொல்லரங்கம் என்ற நிகழ்ச்சி பாலாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு சங்க தலைவர் வே.சிவராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். சங்க செயலாளர் ஆ.மயில்வாகனன், ஆர்சிஎம் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் வி.எல்.ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒருங்கிணைப்பாளர் ம.ம.பழனி வரவேற்றார். மேலும் சிலம்பில் சிந்தையைக் கவர்ந்த நீதி எது?என்ற தலைப்பில் சொல்லரங்கம் நடைபெற்றது. இதில் நடுவராக, நல்லறச் செல்வர் முனைவர் வே.சிவராமகிருஷ்ணன் தலைமை ஏற்று நடத்தினார். அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும்..! என்ற தலைப்பில் கவிஞர் நா. முத்துவேலன் அவர்களும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்...! என்ற தலைப்பில் தமிழ்ச் செம்மல் கா.செந்தாமரைச் செல்வி அவர்களும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்..! என்ற தலைப்பில் தமிழ்ச் செம்மல் மா.ஏழுமலை அவர்களும், பங்கேற்று உரையாற்றினர். மேலும் இந்த நிகழ்வில் ஏராளமான தமிழ் ஆர்வலர்கள் பங்கேற்றனர். இறுதியில் சங்க தகவல் தொடர்பாளர் கேப்டன் பிரபாகரன் நன்றி கூறினார்

# கூட்டுறவு சங்க ஊழியர்கள் வேலைநிறுத்தம் நியாய விலைக் கடை திறக்கவில்லை




விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் தொடர்ச்சியாக, செஞ்சி காந்தி பஜாரில் உள்ள வேளாண் தொடக்க கூட்டுறவு சங்க ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் இரண்டாவது நாளாக தொடர்கிறது. இதனால் சங்கத்தின் கீழ் செயல்படும் நியாய விலைக் கடையும் திறக்கப்படவில்லை. விவசாயிகளிடம் கடன் வசூல் செய்யும்போது கூட்டுறவு சங்க ஊழியர்களை தரக்குறைவாக பேசியதாகக் கூறப்படும் தமிழக விவசாயிகள் பாதுகாப்புச் சங்க நிறுவனர் ஈசன் முருகசாமியை கைது செய்ய வலியுறுத்தி, ஊழியர்கள் கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஈசன் முருகசாமி மீது நடவடிக்கை எடுக்கப்படும் வரை வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என ஊழியர்கள் தெரிவித்தனர்.

# ஸ்வாமி தேசிகன் சாற்றுமுறை வைபவம்..!



வந்தவாசி, செப் 25:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த எரமலூர் ஸ்ரீ சுந்தரவரத லக்ஷ்மி நாராயண பெருமாள் திருக்கோவிலில் நடைபெற்ற ஸ்வாமி தேசிகன் சாற்றுமறை வைபவத்தில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. மேலும் மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சி பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக அரசின் சாதனை விளக்க சிறு புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்தனர்



மாண்பமை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் சென்னை மற்றும் மாண்பமை திருவண்ணாமலை மாவட்ட சமரச மையத்தின் வழிகாட்டுதல் படி ஆரணி வட்ட சமரச மையத்தின் சார்பில் 23.09.2026 ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் ஆரணியில் காலை 9.15மணியளவில் சமரச மைய பேரணி மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.இந்நிகழ்ச்சியை மாண்பமை கூடுதல் மாவட்ட நீதிபதி திருமதி.C.ஜெயஸ்ரீ,B.A.,B.L. அவர்கள் பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து தலைமையுரை ஆற்றி சமரச மையத்தின் பயன்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட உரிமையியல் நீதிபதி செல்வி.D.V. கோப்பெருந்தேவி ,B.Com,L.L.B(Hons) கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பார் அசோசியேஷன் தலைவர் V.வெங்கடேசன் மற்றும் திருமதி.கே.லதா, சென்ட்ரல் நாசர், கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விரைவு வழி நீதிமன்றம், ஆரணி வரவேற்புரை வழங்கினார்கள். மூத்த வழக்கறிஞர் திரு கே.ராஜமூர்த்தி அவர்கள் சமரச தினத்தை பற்றிய விழிப்புணர்வு உரையாற்றினார்.ஆரணி அரசினர் பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் சமரச மைய விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டனர். மாணவிகளுடன் அப்பள்ளியைச் சேர்ந்த திருமதி.பி.தாமரைச்செல்வி, தலைமை ஆசிரியர், அரசினர் பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆரணி மற்றும் ஆசிரியைகள் பங்கு பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் அரசு வழக்கறிஞர்கள் திரு.எஸ்.சியாம்சுந்தர்,திரு.எஸ். பாலாஜி மற்றும் திரு.எம்.சங்கரன் ஆகியோர்களும் , துணைத் தலைவர் திரு.®.திருஞானம், செயலாளர் திரு.சண்முகம், பொருளாளர் திரு.எஸ். செந்தில் முன்னாள் தலைவர் திரு.எஸ். ஸ்ரீதரன் மற்றும் திரு.டி.பார்த்திபன் ஆகியோர்களும் மூத்த மற்றும் இளம் வழக்கறிஞர்களும் நீதிமன்ற ஊழியர்களும் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.இந்நிகழ்ச்சியின் இறுதியாக திரு.கே.சௌந்தர் இளநிலை உதவியாளர் வட்ட சமரச மையம் ஆரணி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

# PSG மருத்துவமனை மற்றும் AVP இணைந்து ஒருங்கிணைந்த மருத்துவ மையம் தொடக்கம்



கோவை செப்:25

நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன்,உடல்,மனம் மற்றும் வாழ்க்கைமுறை சார்ந்த காரணிகளையும் கருத்தில் கொண்டு முழுமையான சுகாதாரப் பராமரிப்பை வழங்கும் நோக்கில், PSG மருத்துவமனை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, தி ஆர்ய வைத்ய பார்மசி (கோயம்புத்தூர்) லிமிடெட் (AVP) நிறுவனத்துடன் இணைந்து,கோவையில் ஒருங்கிணைந்த மருத்துவ மையத்தை (Integrated Medicine Facility)PSG சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கிப்ளாக்கில் நான்காம் தளத்தில் தொடங்கியுள்ளது.

இந்த புதிய மருத்துவ வசதியின் மூலம் நவீன மருத்துவம், ஆயுர்வேதம் மற்றும் யோகா ஆகிய மூன்று அணுகு முறைகளும் ஒரே மருத்துவக் கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

நோயாளிகளின் தேவைக்கேற்ப நவீன மருத்துவ நிபுணர்கள், ஆயுர்வேத மருத்துவர்கள் மற்றும் யோகா நிபுணர்கள் இணைந்து மதிப்பீடு செய்து ஆலோசனை வழங்கும் வகையில் இந்த மையம் செயல்படுகிறது. இந்த ஒருங்கிணைந்த மருத்துவ மையத்தின் தொடக்க நிகழ்ச்சி PSG & Sons'சாரிட்டிஸ் இன் நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன் மற்றும் AVP நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் C.தேவிதாஸ் வாரியர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

யோகா சிகிச்சையில் தொடங்கிய பயணம்

ஒருங்கிணைந்த மருத்துவ அணுகுமுறையை நோக்கிய PSG மருத்துவமனையின் பயணம் தற்போது தொடங்கியது அல்ல.2007 ஆம் ஆண்டிலேயே யோகாவை ஒரு சிகிச்சை முறையாக அறிமுகப்படுத்திய கோவையின் முதல் பல்துறை மருத்துவமனை PSG மருத்துவ மனை என மருத்துவமனை தெரிவித்துள்ளது.

கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக நோயாளிகளின் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு பராமரிப்பில் யோகா தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இதன் மூலம், மருத்துவ சிகிச்சையுடன் வாழ்க்கைமுறை சார்ந்த அணுகுமுறைகளையும் ஒருங்கிணைக்கும் அனுபவத்தை றிஷிநி மருத்துவமனை தொடர்ந்து வளர்த்து வந்துள்ளது.

இந்த அனுபவம் தற்போது மருத்துவ ஆராய்ச்சியிலும் விரிவடைந்துள்ளது.PSG மருத்துவமனையும் AVP நிறுவனமும் இணைந்து முடக்கு வாதம் (Rheumatoid Arthritis) தொடர்பாக ஒருங்கிணைந்த சிகிச்சை அணுகுமுறை குறித்த மருத்துவ ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளன.

இதில் நவீன ருமட்டாலஜி மருத்துவ முறைகளுடன், ஆயுர்வேதம் மற்றும் யோகா சார்ந்த சிகிச்சை நடைமுறைகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இந்த முயற்சியில் ஊக்கமளிக்கும் மருத்துவ முடிவுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நோயாளிகளுக்கு ஒருங்கிணைந்த மருத்துவ ஆலோசனை: புதிய ஒருங்கிணைந்த மருத்துவ மையத்தில்,மூட்டுவலி மற்றும் மூட்டுத் தொடர்பான பிரச்சினைகள்,வாழ்க்கைமுறை சார்ந்த நோய்கள்,சர்க்கரை நோய்,உயர் ரத்த அழுத்தம்,மன அழுத்தம்,தூக்கமின்மை மற்றும் தடுப்பு சுகாதாரப் பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளுக்கு ஒருங்கிணைந்த மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.

மேலும் நோயாளிகளின் தேவைக்கேற்ப பாரம்பரியமான பஞ்சகர்மா சிகிச்சை முறைகளும் (Panchakarma Therapies) வழங்கப்படும்.

இந்த புதிய ஒருங்கிணைந்த மருத்துவ வசதியானது,தேசிய மருத்துவ ஆணையத்தின் (NMC) ஒருங்கிணைந்த மருத்துவம் மற்றும் நவீன மருத்துவத்துடன் AYUSH மருத்துவ முறைகளை ஒருங்கிணைப்பது தொடர்பான வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப இந்த வசதி உருவாக்கப்பட்டுள்ளது என றிஷிநி மருத்துவமனை தெரிவிக்கின்றது.

முழுமையான நலவாழ்வை நோக்கிய றிஷிநியின் அடுத்த கட்டம்: PSG மருத்துவ மனையின் ஒருங்கிணைந்த சுகாதார அணுகுமுறையின் மற்றொரு முயற்சியாக"நலம்–ஞ் பஞ்சகோசம் (Nalam–Pancha Kosam) Health Check-up"திட்டமும் செயல்பட்டு வருகிறது. சுமார் ஒரு ஆண்டுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டம்,அன்னமய கோசம்,பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ் ஞானமய கோசம் மற்றும் ஆனந்தமய கோசம் எனப்படும் ஐந்து கோசங்களை அடிப்படையாகக் கொண்டது.

இதில் நவீன மருத்துவப் பரிசோதனைகளுடன், ஆயுர்வேத பிரகிருதி (Prakriti) மதிப்பீடு,யோகா மதிப்பீடு, தனிப்பட்ட உணவு மற்றும் வாழ்க்கைமுறை வழிகாட்டுதல் ஆகியவை ஒருங்கிணைக்கப் படுகின்றன. இந்தப் புதிய ஒருங்கிணைந்த மருத்துவ மையம்,PSG மருத்துவ மனையின் முழுமையான சுகாதாரப் பராமரிப்பை நோக்கிய பயணத்தின் அடுத்த கட்டமாக அமைந்துள்ளது.

மருத்துவத்தின் நவீன அறிவையும் பாரம்பரிய ஞானத்தையும் ஒரே தளத்தில் இணைக்கும் புதிய முயற்சி :

நவீன மருத்துவம், ஆயுர்வேதம் மற்றும் யோகா ஆகியவற்றை ஒரே மருத்துவக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதன் மூலம்,மருத்துவ நிபுணத்துவம்,பாரம்பரிய மருத்துவ அறிவு மற்றும் வாழ்க்கைமுறை சார்ந்த அணுகுமுறைகள் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படும் ஒரு மருத்துவச் சூழலை உருவாக்க PSG மருத்துவ மனையும் AVP நிறுவனமும் முயற்சி மேற்கொண்டுள்ளன. நோயை மட்டும் மையப்படுத்தாமல், நோயாளியின் முழுமையான நலவாழ்வை மையமாகக் கொண்ட சிகிச்சைப் பயணத்தை உருவாக்குவதே இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறையின் நோக்கமாகும்.நவீன மருத்துவத்தின் அறிவியல் அடிப்படையிலான சிகிச்சை முறைகளுடன்,ஆயுர்வேதத்தின் பாரம்பரிய அறிவும்,யோகாவின் வாழ்க்கைமுறை சார்ந்த பயிற்சிகளும் தேவைக்கேற்ப ஒருங்கிணைக்கப்பட்டு, நோயாளியின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ற முழுமையான பராமரிப்பை வழங்குவதற்கான முயற்சியாக இது அமைகிறது.

# புதுச்சேரி 10 கண்ணு பகுதியில் குப்பைகள் அகற்றப்படாததை கண்டித்து சாலை மறியல் - காங்கிரஸ் எம்எல்ஏ தலைமையில் போராட்டம்



புதுச்சேரி 10 கண்ணு பகுதியில் துப்புரவு பணிகள் முறையாக நடைபெறவில்லை என்றும், குப்பைகள் சரிவர அகற்றப்படுவதில்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனை கண்டித்து, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கார்த்திகேயன் எம்எல்ஏ தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

சாலையில் குப்பைகள் தேங்கியுள்ள நிலையில், துப்புரவு பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி இந்த போராட்டம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்எல்ஏ தலைமையில் நடைபெற்ற சாலை மறியல் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வேலைக்குச் செல்லும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் சாலையில் செல்ல முடியாமல் அவதியடைந்தனர்.

இதன் காரணமாக 10 கண்ணு பகுதி சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது. சம்பவ இடத்தில் அதிகாரிகள் மற்றும் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி நிலைமையை சீரமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# குடும்பத் தகராறில் தந்தையை தாக்கிய மகன் கைது



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே மருதேரி கிராமத்தைச் சேர்ந்தவர் ராமமூர்த்தி (49), விவசாயி. இவரது மகன் அகிலன் (32), ஓசூர் அசோக் லேலண்ட் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

குடும்பத் தகராறு காரணமாக அகிலன் தனது மனைவியை தாக்க முயன்றதாக கூறப்படுகிறது. அப்போது தந்தை ராமமூர்த்தி தடுத்ததால், ஆத்திரமடைந்த அகிலன் அவரை தலையில் தாக்கியுள்ளார். இதில் தலையில் ரத்தக்காயம் ஏற்பட்டு 10 தையல்கள் போடப்பட்டன. ராமமூர்த்தி போச்சம்பள்ளியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து அகிலனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.



விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியம் ஆரியூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் பயன்பாட்டில் இல்லாத ஆழ்துளை கிணற்றினை செயற்கை செறிவூட்டும் மீன் நீர் நிரப்பக் குழாய் அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# செல்லம்பட்டி , அகரம் உள்ளிட்ட பல இடங்களில் மூன்று நாட்களாக எரியாத உயர்மின் கோபுர மின் விளக்குகள் மக்கள் அவதி



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த செல்லம்பட்டி பிரிவு ரோடு மற்றும் அகரம் ஜ் ரோடு உள்ள உயர் கோபுரம் வழக்குகள் தெரியாததால் மக்கள் இரவு நேரங்களில் அவதி உற்று வருகின்றன இந்த பகுதியில் அதிக போக்குவரத்து ஷூ கம்பெனி ஓலா நிறுவனங்கள் பள்ளி பேருந்துகள் அதிகம் செல்லக்கூடிய முக்கியமான சாலை ஆகும் இந்த சாலையில் கடந்த சில மாதங்களாகவே உயர் மின் கோபுர விளக்கு எரியாமல் உள்ளது லட்சக்கணக்கில் செலவு செய்து தொடர்ந்து தெரியாததால் இரவு நேரங்களில் சட்டவிரோதமான செயல்களும் திருட்டு சம்பவங்களும் நடக்க அதிக வாய்ப்புள்ளது பலமுறை புகார் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை உடனடியாக மாவட்ட நிர்வாகம் சரி செய்ய வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# முதலமைச்சர் கோப்பை சிலம்பப் போட்டியில் சங்கராபுரம் சூர்யா ஸ்போர்ட்ஸ் கிளப் மாணவர் சாதனை




சங்கராபுரம், செப். 25:

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான மாவட்ட அளவிலான சிலம்பப் போட்டி நடைபெற்றது. பள்ளி, கல்லூரி மற்றும் பொதுப் பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டியில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

பள்ளி மாணவர்களுக்கான சிலம்பப் போட்டியில், கள்ளக்குறிச்சி மாவட்ட தென்னிந்திய பாரம்பரிய சிலம்ப விளையாட்டுக் கலைக்கழகம் சார்பில் பங்கேற்ற சங்கராபுரத்தைச் சேர்ந்த மாணவர் நிதிஷ்குமார் வெற்றி பெற்று சாதனை படைத்தார்.

இதன்மூலம் மாநில அளவில் நடைபெற உள்ள சிலம்பப் போட்டிக்கு நிதிஷ்குமார் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

வெற்றி பெற்ற மாணவர் நிதிஷ்குமாரை கள்ளக்குறிச்சி மாவட்ட தென்னிந்திய பாரம்பரிய சிலம்ப விளையாட்டுக் கலைக்கழகத் தலைவர் சுதாகரன், பயிற்சியாளர்கள் சூரியமூர்த்தி, தமிழ்ச்செல்வன், பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டி வருகின்றனர்.

# வேப்பனப்பள்ளி அருகே பைக் மீது லாரி மோதியதில் ஆசிரியைகள், மாணவர் உள்பட 3 பேர் உயிரிழப்பு



வேப்பனப்பள்ளி:

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப் பள்ளி அருகே பைக் மீது லாரி மோதியதில் தனியார் பள்ளி ஆசிரியைகள், மாணவர் உள்பட 3 பேர் உயிரிழந்தனர். கிருஷ்ணகிரி பழையபேட்டையைச் சேர்ந்தவர் சுதாராணி (36). மேல்சோமார் பேட்டையைச் சேர்ந்தவர் முஸ்கான் கவுஸ்ஷேக் (27). இவர்கள் வேப்பனப்பள்ளியை அடுத்துள்ள வி.மாதேப்பள்ளி பிரிவு சாலை அருகே உள்ள தனியார் மெட்ரிக். பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வந்தனர். முஸ்கான் கவுஸ் ஷேக்கின் மகன் ரிகான் (7), அந்தப் பள்ளியில் 2ஆம் வகுப்பு பயின்று வந்தார். இவர்கள் மூவரும் பள்ளியிலிருந்து பைக்கில் கிருஷ்ணகிரியில் உள்ள வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தனர். முஸ்லிம்பூர் அருகே வேப்பனப்பள்ளி கிருஷ்ணகிரி சாலையில் வந்தபோது, அந்த வழியே வேகமாக வந்த லாரி, பைக்கின் பின்னால் மோதியது. இதில், நிலைதடுமாறி கீழே விழுந்ததில் மூவரும் லாரியில் சிக்கி நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநர், லாரியை அங்கேயே நிறுத்திவிட்டு தலைமறைவானார். தகவல் அறிந்த போலீஸார் நிகழ்விடத்துக்கு சென்று மூவரின் உடல்களையும் மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். விபத்து குறித்து, வேப்பனப்பள்ளி போலீஸார் வழக்குப் பதிந்து தலைமறைவான லாரி ஓட்டுநரை தேடிவருகின்றனர்.

## நாமக்கல் மக்களின் பல ஆண்டு கனவு.

# சேலம் திண்டுக்கல் இரட்டை ரயில் பாதை திட்டத்துக்கு 2,241 கோடி ஒதுக்கீடு

சேலம். செப்.25–

அண்மையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில இதில், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா மாநிலங்களில் புதிதாக 5 ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட்டிருந்தது.

இந்த திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.10 ஆயிரத்து 21 கோடி ஆகும். இந்த நிலையில், ரயில் பாதை திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதில் சேலம் திண்டுக்கல் இடையிலான இரட்டை ரயில் பாதை திட்டத்துக்கு ரூ.2,241 கோடி ஒதுக்கீடு செய்ய ரயில்வே வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த பாதை செயல்பாட்டிற்கு வந்தால், சென்னை மற்றும் பெங்களூருவிலிருந்து தென் தமிழகத்தை இணைக்கும் ஒரு மிக முக்கியமான மாற்றுப் பாதையாக இருக்கும்.

அண்மையில் மத்திய அமைச்சரவை கூடி, பல்வேறு ரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒப்புதல் அளித்தனர். அதனடிப்படையில், தெற்கு ரயில்வே மண்டலத்திற்கு அரக்கோணம்ரேணிகுண்டா இடையிலான 3 மற்றும் 4வது ரயில் பாதை 77 கிலோ மீட்டர் தொலைவுக்கு அமைக்க ரூ.1,936 கோடியும், ஒசூர் ஓமலூர் இடையே 147 கிலோ மீட்டர் தொலைவுக்கு சரக்கு ரயில் பாதை அமைக்க சுமார் ரூ.2,042 கோடியும் ஒதுக்க ரயில்வே வாரியம் அனுமதி அளித்துள்ளது.

அதேபோல் சேலம் கரூர் திண்டுக்கல் இடையே 159 கிலோ மீட்டர் தொலைவுக்கு இரட்டை ரயில் பாதை அமைக்க ரூ.2,241.67 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்ய ஏற்கனவே ரயில்வே வாரியம் அனுமதி அளித்தது. இந்த நிலையில் தற்போது, சேலம் கரூர் திண்டுக்கல் இரட்டை ரயில் பாதை அமைக்க ரூ.2,241 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மத்திய ரயில்வே வாரியம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதில், ரூ.1,580 கோடியானது கட்டுமானப் பணிகளுக்காகவும், ரூ.281.78 கோடி தொலைத் தொடர்பு பணிகளுக்காகவும், ரூ.379.56 கோடி மின்சார இணைப்புகள் உள்ளிட்ட பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள்.

சேலம், நாமக்கல், கரூர் வழியாக வரும் திண்டுக்கல் ரயில் வழித்தடத்தில் 18 பெரிய பாலங்கள், 241 சிறிய பாலங்கள் உள்ளன. அதனை மேம்படுத்தி இரட்டை பாதை அமைக்கப்பட இருக்கிறது. இந்த பாதையில் தான் புதிய ரயில்கள் தற்போது இயக்கப்படுகின்றன. இது தற்போது ஒற்றைப் பாதையாக இருப்பதால் ரயில்களை கடக்க வைக்க ரயில்களை ஆங்காங்கே ரயில் நிலையங்களில் நிறுத்தி வைக்க வேண்டி உள்ளது.

அதேபோல் சரக்கு ரயில் போக்குவரத்தும் மேம்படும். சேலம், நாமக்கல் கரூர், திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்டங்களுமே மிகவும் தொழில்துறை மாவட்டங்கள் ஆகும். எனவே சரக்கு போக்குவரத்து அதிகமாக நடக்கும். பயணிகள் போக்குவரத்தும் லாபகரமாக இருக்கும் என்பதால் மத்திய அரசு பச்சைக்கொடி ஒப்புதல் அளித்துள்ளது. அதேபோல் சென்னை, பெங்களூருக்கு இந்த வழித்தடம் முக்கிய வழித்தடமாக இருக்க போகிறது என்பதாலும் இதன் அவசியம் உணர்ந்தே அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த சேலம் திண்டுக்கல் (நாமக்கல் வழியாக) ரயில் பாதை எனப்து 2013ல் மக்கள் பயன்பாட்டுக்கு வந்தது. தற்போது, நாமக்கல் வழியாக, ஐந்து தினசரி ரயில்கள் உட்பட வாரத்திற்கு, 50 ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடம் முன்பு சேலம் ஈரோடு, கரூர் வழியாக இருந்தது. நாமக்கல் மாவட்டம் தான் ரயில் வசதி இல்லாத மாவட்டமாக இருந்தது. பல ஆண்டு கோரிக்கையை மத்திய அரசு கடந்த 2013ல் நிறைவேற்றியது.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், சேலம் கரூர் புதிய அகல ரயில்பாதை அமைக்கும்போதே, இருவழிப்பாதைக்கு தேவையான அளவிற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டது. மேலும், மோகனூர் வாங்கல் இடையே காவிரி ஆற்றில், இரட்டை ரயில் பாதை அமைக்கும் வகையில், ஏற்கனவே, ஆற்றில் பில்லர் போட்டு, கான்கிரீட் தளம் போடப்பட்டு விட்டது. எனவே பல்வேறு சவால்கள் மிக குறைவாகவே உள்ளதால் 2029 30ல் இந்த திட்டத்தை முடிக்க அதிக வாய்ப்பு உள்ளது.

# பெண்களை பிற்போக்குத்தனமாக பார்க்கும் மனநிலை மாற வேண்டும் கனிமொழி எம்எல்ஏ கருத்து



கோவை செப்:25

என் அன்பு தங்கை அமைச்சர் கீர்த்தனா அறுவை சிகிச்சைக்குப் பிறகு மருத்துவர்கள் 20 நாட்கள் ஓய்வு எடுக்க அறிவுறுத்திய நிலையிலும்,4 நாட்களிலேயே மீண்டும் மக்கள் பணிக்குத்திரும்பினார்.

மருத்துவமனை படுக்கையில் இருந்தபோதும்,முதலமைச்சரின் லண்டன் பயணத்திற்கான ஏற்பாடுகள் சரியாக நடைபெறுகிறதா என்பதில் தான் அவரது கவனம் இருந்தது.

ஆனால்,அவர் சில நாட்கள் பணிக்கு வராததைப் பற்றி பேசும் போது, அவரது உடல்நிலை,காயம் குறித்து சிந்திக்காமல் அதை மாதவிடாயுடன் தொடர்புபடுத்தும் பிற்போக்குத்தனமான சிந்தனை வேதனை அளிக்கிறது.

பெண்கள் அவர்களின் உடல் சுழற்சியால் மட்டும் வரையறுக்கப் படுபவர்கள் அல்ல.நாங்கள் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள், தாய்கள்,மகள்கள்.வலி,நோய்,காயம் என அனைத்தையும் கடந்து கடமையைத் தொடர்ந்து செய்பவர்கள்.

ஒரு பெண்ணின் பணியை விமர்சிக்க முடியாதபோது,அவரது உடலைப் பற்றி பேசுவது அரசியல் விமர்சனம் அல்ல;அது பிற்போக்குத் தனமான மனநிலையின் வெளிப்பாடு.

பெண்களை அவர்களின் சாதனைகளுக்காக மதிப்போம். அவர்களின் உடலை அரசியல் கேலிக்குரிய பொருளாக மாற்றுவதை நிறுத்துவோம்.

பெண்கள் இதைவிட சிறந்த மரியாதைக்கு உரியவர்கள்.தமிழ்நாடும் இதைவிட சிறந்த அரசியல் பண்பாட்டுக்கு உரியது.

# மாநில விளையாட்டு போட்டிகளில் சாதித்த மாவட்ட ஊர்காவல் படையினருக்கு பாராட்டு



கிருஷ்ணகிரி: செப்.25–

ஊர்காவல் படையினருக்கான மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில், வெற்றி பெற்ற கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்காவல் படையினருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தேனியில், ஊர்காவல் படையினருக்கு பல்வேறு பிரிவுகளில், மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் நடந்தது. கடந்த செப்., 18 முதல், 20 வரை மூன்று நாட்கள் நடந்த போட்டியில் சேலம் சரக அளவிலான போட்டிகளில், கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த ஊர்காவல் படையினரும் கலந்து கொண்டனர். இதில், விளையாட்டு மற்றும் தொழில்முறை பிரிவு போட்டிகளில் சாம்பியன் பட்டம் பெற்றனர்.

அதன்படி அணிவகுப்பு, ஸ்குவாட் டிரில், கிராஸ் கன்ட்ரி மற்றும் முதலுதவி (பெண்கள் பிரிவு) உள்ளிட்ட பிரிவுகளில் முதலிடம் பெற்றனர். அதேபோல, குண்டு எறிதல், 200 மீட்டர் ஓட்டம், வாலிபால் உள்ளிட்டவற்றில் இரண்டாமிடமும் பெற்றனர். தவிர மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு மாவட்டத்தை சேர்ந்த ஊர்காவல் படையினர் சாதனை படைத்தனர். அவர்கள் அனைவரும் மாவட்ட எஸ்.பி., அனிதாவை சந்தித்து, தாங்கள் வென்ற கோப்பை, பதக்கங்களை காண்பித்து வாழ்த்து பெற்றனர். வெற்றி பெற்ற வீரர்களை பாராட்டிய மாவட்ட எஸ்.பி., வரும் ஆண்டுகளில், மாநில அளவில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் பெற வேண்டுமென கூறி, வாழ்த்து தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்காவல் படை ஏரியா கமாண்டர் கவுசிக்தேவ் மற்றும் ஊர்காவல் படை அதிகாரிகள் உடனிருந்தனர்

# சுகாதாரத்துறை அமைச்சர் மாவட்டத்தில் போலி பெண் மருத்துவர் கைது.. தவறான சிகிச்சையால், 7 வயது சிறுவன் உயிர் இழந்த சோகம்..

## ஈரோடு நாமக்கல் மாவட்டங்களில் கூடுதல் கண்காணிப்பு அவசியம்..








ஈரோடு. செப். 25

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே போலி பெண் மருத்துவரின் தவறான சிகிச்சையால் 7 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம், அருகே உள்ள ஆர். புதுப்பட்டி வடுகம் பகுதியை சேர்ந்த 7 வயது சிறுவன் ஒருவனுக்கு கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு காச்சல் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சிறுவனின் பெற்றோர்கள் அந்த சிறுவனை ஆர். புதுப்பட்டியில் உள்ள கிருஷ்ணா மெடிக்கல் சென்டருக்கு அழைத்துச் சென்று காய்ச்சலுக்கான மாத்திரை கேட்டு உள்ளனர்.

அப்பொழுது அந்த மெடிக்கலில் இருந்த பெண் ஒருவர் காய்ச்சல் அதிகமாக உள்ளது ஊசி போட வேண்டும் மேலும் சிறுவனுக்கு குளுக்கோசும் செலுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அந்த சிறுவன் சம்பந்தப்பட்ட கிருஷ்ணா மெடிக்கல் சென்டரில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மெடிக்கலில் இருந்த அந்தப் பெண் சிறுவனுக்கு ஊசி செலுத்தி, குளுக்கோஸ் போட்டுள்ளார்.

பின்னர் சிகிச்சை முடிந்து அந்த சிறுவன் தனது வீட்டிற்கு சென்ற நிலையில் மறுநாள் உயிரிழந்து விட்டான்.

இதனைத் தொடர்ந்து அந்த7 வயது சிறுவனின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஆர் புதுப்பட்டியில் செயல்பட்டு வரும் கிருஷ்ணா மெடிக்கல் சென்டருக்கு சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்ட நிலையில், போலீசார், மருத்துவ அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் என ஒரு டீம் வந்து சம்பந்தப்பட்ட கிருஷ்ணா மெடிக்கல் சென்டர் சோதனை இத்தபோது, அங்கு பெரிய அளவில் மருத்துவமனைகளில் பயன்படுத்தக்கூடிய மருந்துகளும், மாத்திரைகளும், மருத்துவ உபகரணங்களும் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த மெடிக்கலில் சிறுவனுக்கு சிகிச்சை அளித்த பெண்ணிடம் அதிகாரிகள் குழு விசாரணை நடத்தினர்.

அந்த விசாரணையில் அந்தப் பெண் ராசிபுரத்தை சேர்ந்த கிள்ளிவளவன் என்பவரது மனைவி உஷா என்பது தெரியவந்தது. இவர் சில ஆண்டுகளுக்கு முன்பு கேரளாவில் உள்ள ஒரு இடத்தில் நர்சிங் பயிற்சி மட்டும் எடுத்ததும், முறையான மருத்துவ படிப்பு படிக்கவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்து அந்தப் பெண் மருத்துவம் படிக்காமல் கடந்த 10 ஆண்டுகளாக அப்பகுதியில் பொதுமக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மருத்துவம் படிக்காமல், மெடிக்கல் சென்டர் மட்டும் வைத்துக்கொண்டு பொதுமக்களுக்கு போலியான முறையில் தவறான சிகிச்சை வழங்கியதும், அதன் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப் பட்டதும் 7 வயது சிறுவன் உயிரிழந்ததும் தெரியவந்து அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் கே ஜி அருண்ராஜ் அவர்களின் சொந்த மாவட்டமான நாமக்கல் மாவட்டத்தில் இதுபோன்று போலி மருத்துவர்கள் இருப்பதும் அவர்களால் பொதுமக்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு அதில் ஒரு சிறுவன் உயிரிழந்த சம்பவம் பேசு பொருளாக உள்ளது.

மேலும் நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் இது போன்று மெடிக்கல் சென்டர் வைத்துக் கொண்டு சுகாதார துறையின் சட்ட விதிகளுக்கு மாறாக பெட்கள்( படுக்கை) அமைத்து சிகிச்சை வழங்கப்பட்டு வருவது அதிகம் உள்ளது.

இவர்கள் போதிய மருத்துவம் படிக்காமல் மெடிக்கல் சென்டர் வைத்துக் கொண்டு பண ஆசையால் அப்பாவை பொதுமக்களின் உயிரோடு விளையாடுகிறார்கள்.

இது போன்ற போலி மருத்துவர்கள் மெடிக்கல் சென்டர் வைத்துக் கொண்டு நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் அதிக அளவில் செயல்பட்டு வருகிறார்கள்.

எனவே சம்பந்தப்பட்ட துறை அமைச்சரும், சார்புடைய துறை அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாவப்பட்ட, பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் அரசுக்கு கோரிக்கை வைக்கின்றனர்.

# நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா



புதுக்கோட்டை, செப். 25

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் அருகே பெருநாவலூரில் இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்ட நாளை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் ரா.சரளா தலைமை தாங்கி, நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி, வாழ்த்துகள் கூறினார். தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்து ஊக்கப்படுத்தினார்.

கல்லூரித் தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் கா. காளிதாஸ், கணினி அறிவியல் துறை விரிவுரையாளர்கள் முனைவர் ப.நாராயணசாமி, முனைவர் த. செந்தில் குமார், ப.செந்தில் குமார், தமிழ்த்துறை விரிவுரையாளர் ரா.ராஜலட்சுமி, கல்லூரிக் கண்காணிப்பாளர் பா. மகாராஜன் உள்ளிட்ட பலரும் பங்கேற்று மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர் ஒருவருக்கொருவர் வாழ்த்துகள் கூறி உற்சாகமடைந்தனர்.

கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் ச.ரமேஷ், மு.பழனித்துரை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர் அலுவலகப்பணியாளர்கள் ஒருங்கிணைத்திருந்தனர்.

# சென்னை விமான நிலையம் தனியார்மயம்: முதல்வர் கடிதத்திற்கு விமான நிலைய ஆணையம் விளக்கம்

சென்னை: செப்.25–

சென்னை விமான நிலையத்தின் நிர்வாகத்தை மாற்றக் கோரி, கடந்த ஆகஸ்ட் மாதம் முதல்வர் விஜய் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்த நிலையில், அந்தப் புகாரின் மீது விளக்கமளிக்குமாறு மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் தற்போது இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் (AAI) கேட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த செப்டம்பர் 10ஆம் தேதி விளக்கம் கேட்கப்பட்ட நிலையில், அது குறித்த விவரங்களை விமான நிலைய ஆணையம் தற்போது மத்திய அரசுக்கு அளித்துள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டில் விமான எரிபொருளுக்கு விதிக்கப்படும் 29% வாட் (VAT) வரி அதிகமாக இருப்பதால், விமான சேவைகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, விமான இயக்க நேரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விமான முனையங்களில் அதிகளவில் வரும் விஐபி வாகனங்களால் ஏற்படும் பிரச்சனைகளும் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.தமிழ்நாடு செய்திகள்

உள்ளூர் பிரச்சனைகள் காரணமாக அந்த விமான நிலையத்தின் செயல்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதே சமயம், கடந்த 2025 மற்றும் 2026 ஆம் நிதி ஆண்டுகளில் பயணிகளின் போக்குவரத்து 2.7% அதிகரித்துள்ளதாக இந்த விளக்கக் கடிதத்தில் விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும், சரக்குகளைக் கையாளும் திறன் அதிகரித்துள்ளதாகவும், சுமார் 15,500 மெட்ரிக் டன் அளவிலான ஆப்பிள் ஐபோன்கள் சென்னை விமான நிலையம் மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு விரிவாக்கப் பணிகள் உள்ளிட்ட திட்டங்களுக்குத் தேவையான உரிய அனுமதிகள் தகுந்த நேரத்தில் கிடைக்கவில்லை என்று அந்தத் கடிதத்தில் இந்திய விமான நிலைய ஆணையம் (Airport Authority) குறிப்பிட்டுள்ளது. மாநில அளவிலான கட்டமைப்பு வசதிகள் இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை என்றும், அதற்கான அனுமதிகள் தேங்கிய நிலையில் உள்ளதாகவும் விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992